# <u>செய்தி வெளியீடு</u>

செய்தி வெளியீடு எண்.17/2025 நாள் :19.03.2025

**நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 21.03.2025 அன்று முதல் 26.03.2025 அன்று வரை மண்டலம்–13, 14 மற்றும் 15–க்குட்பட்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட கீழ்க்கண்ட சில பகுதிகளில் 21.03.2025 அன்று முதல் 26.03.2025 அன்று வரை குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலங்கள் | பகுதிகள் | குடிநீர் விநியோகம் தடைபடும் நாட்கள் |
|---|---|---|
| மண்டலம் –13 (அடையாறு) | திருவான்மியூர் | 21.03.2025<br>23.03.2025<br>25.03.2025 |
| மண்டலம் –14 (பெருங்குடி) | கொட்டிவாக்கம் | |
| மண்டலம் –15 (சோழிங்கநல்லூர்) | ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, வெட்டுவான்கேணி, உத்தண்டி | |
| மண்டலம் –14 (பெருங்குடி) | பெருங்குடி, பாலவாக்கம், காரப்பாக்கம் | 22.03.2025<br>24.03.2025<br>26.03.2025 |
| மண்டலம் –15 (சோழிங்கநல்லூர்) | சோழிங்கநல்லூர், ஒக்கியம்–துரைபாக்கம் | |

...2...

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, போதுமான அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in